பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1993) நிறைவேற்றப் பெறவேண்டும்'', எனக் கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

8. <u>அறிவிப்புகள்</u>—தொடர்ச்சி.

(ஈ) <u>தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1993 (ஆ.இ.)</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள்

(திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 39/1993), பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள் ளார்கள்.

12. அரசினர் சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-தொடர்ச்சி.

(ஏ) தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1993

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகை முறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1993). மாண்புமிகு கல்வி அமைச்சர்.

பிற்பகல் 2—20

* மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1993@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண் டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்க முடிவு எடுத்து இருப்பதை நான் வரவேற்கிறேன். அதோடு தமிழ்க் கல்லூரியிலே படித்து வேலையில்லாமல் இருக்கிறார்கள்; அப்படி வேலை இல்லாமல் இன்றைய தினம் வயது கடந்து, வேறு எந்த வேலைக்கும் செல்ல முடியாத சூழ்நிலையிலே தமிழகம் முழுமையும் தமிழறிஞர்கள் இருக்கிறார்கள். அப் படிப்பட்ட அந்தத் தமிழறிஞர்களுக்கும், தமிழ்க் கல்லூரியிலே படித்து வேலையற்று இருக்கக்கூடிய, வாழ்க்கையிலே சிரமப் படக்கூடிய உள்ள அவர்களுக்கும் உதவித் தொகை வழங்கு வதற்கு அரசு அதிலே இணைத்து வழங்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

@ 29—10—1993 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அர சிதழில் வெளியிடப் பெற்றது.